**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : DVC 16/2025**

**Prosecution witness : ம.சா. 1** **Date : 05.02.2026.**

| | |
|---|---|
| **Name : தேன்மொழி** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**குறுக்கு விசாரணை–**

1) பத்தி 3 ல் அக்டோபர் மாதம் 2018 ம் வருடம் கருவுற்று இருந்தேன் அப்போது என் தாயாருக்கு உடல் நிலை சரியில்லாததால் என் தாயாரை பார்க்க சேலம் கேம்ப் செல்ல கேட்டதற்கு என் கணவர் தகாத வார்த்தையால் திட்டி கொடுமைபடுத்தியதாக சொல்லியுள்ள நிலையில் என்ன கெட்ட வார்த்தை பேசினார் என்றால் உன் அம்மா வீட்டிற்கு இனிமேல் செல்லக்கூடாது என்று கெட்ட வார்த்தை சொல்லி திட்டினார். 7 மாத கர்பிணியாக இருக்கும் போது பிரயாணம் செய்யக்கூடாது என்ற நல்ல எண்ணத்தில் சொன்னதை திருச்சி சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

2) திருமணத்திற்கு முன்பே என் அம்மாவிற்கு கர்ப பையில் கட்டி பிரச்சனை இருந்ததால் என் அம்மா திருமணத்தின் போது கோவிலுக்குள் வரவில்லை என்றால் சரிதான். என் அம்மா 10 நாட்களுக்கு ஒரு முறை போன் செய்து என் அம்மா என்னை மூளை சலவு செய்ததால் எதிர்மனுதாரரிடம் செல்ல வேண்டுமென்று நான் தான் பிரச்சனை செய்தேன் என்றால் இல்லை என் அம்மா போன் செய்யவில்லை, நானே தான் என் அம்மாவை சென்று பார்த்தேன்.

3) என் குடும்பத்தாருடன் பேசக்கூடாது என்றும் என் செல்போனை உடைத்ததாக சொல்லப்படும் சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. ஜியோ போனை என் தம்பி வாங்கி கொடுத்ததை உடைத்து விட்டார். அது சம்மந்தமாக குமாரபாளையத்திற்கு அருகில் உள்ள காவல் நிலையத்தில் புகார் அளிக்கவில்லை என்றால் ஆமாம்.

4) பத்தி 4 ல் எதிர்மனுதாரர் சிகிச்சைக்கு இரு சக்கர வாகனத்தில் அழைத்து சென்றார். நான் ரோட்டில் வருபவர்களை பார்த்தால் எதிர்மனுதாரர் அவரோடு போக பார்க்கிறாயா என்று கடுமையான வார்த்தைகளால் திட்டி கொடுமைப்படுத்தியதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. 2018 ல் நடந்த சம்பவத்தை ஜோடித்து எதிர்மனுதாரர் மீது பழி சொல்ல வேண்டி பொய்யான சங்கதியை பத்தி 4 ல் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

5) நான் 3 மாத கர்பிணியாக இருந்த போது என் அம்மா வீட்டில் விட்டாரா என்றால் ஆமாம். என் அம்மா வீட்டில் எத்தனை நாட்கள் இருந்தேன் என்றால் 7 நாட்கள் இருந்தேன். நான் 15 நாளும் என் அம்மா வீட்டில் இருந்துவிட்டு 16 வது நாளை தான் எதிர்மனுதாரர் மேட்டூர் வந்து குமாரபாளையத்திற்கு அழைத்து செல்ல முற்பட்ட போது இன்னும் 2 நாட்கள் என் அம்மாவுடன் இருக்க வேண்டுமென்று தகராறு செய்தேன் என்றால் சரியல்ல.

6) கருவுற்ற சமயம் அடிக்கடி தாயார் வீட்டுக்கு செல்லக்கூடாது என அறிவுறுத்திய நிலையில் அதனை பொருட்படுத்தாமல் நான் தான் சென்றேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் தாயார் ஆசையாக வைத்துக் கொடுத்த மீன் குழம்பை நான் உதாசனப்படுத்தினேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் இரவு நேரத்தில் திடீரென எழுந்து வெளியில் செல்வதும் வேறு பெண்ணை திருமணம் செய்து கொள்வதாக சொல்வதும் மீண்டும் வீட்டிற்கு வருவதுமாக இருப்பது எந்த தேதியில் நடந்தது என்றால் வாரம் ஒரு முறை நடக்கும்.

7) சம்பவம் நடைபெற்றதாக பிரமாண பத்திரிக்கையில் குறிப்பிடவில்லை என்றும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.என் கணவரோடு 9 மாதம் மட்டுமே வாழ்ந்துள்ளேன் என்றும் அந்த நாட்களில் இது போன்ற சம்பவம் நடைபெறவில்லை என்றும் குழந்தை பிறந்த பின்னிட்டு இன்று வரை என் அம்மா வீட்டில் நான் உள்ள நிலையில் நான் தான் கற்பனையாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

8) 5 மாத கர்பிணியாக இருந்த போது விண்ணப்பத்தில் என் பெயருக்கு முன்னால் initial ஆக என் அப்பாவின் பெயரை போட்டேன் என்றும் இதை

பார்த்த எதிர்மனுதாரர் மருத்துவமனை என்று கூட பார்க்காமல் உன் அப்பன் பெயரை போடுகிறாய் உன் அப்பனா உனக்கு குழந்தை கொடுத்தார் என்று சொல்லி அநாவசியமாக பேச வில்லை என்றும் எப்போதுமே நான் என் அப்பாவின் பெயரை மட்டுமே வைத்து கணவர் என்பவரை உதாசனப்படுத்தினேன் என்றால் சரியல்ல.

9) நான் மருத்துவமனையில் கர்பிணியாக இருந்த போது தேன்மொழி கணவர் ராஜா யார் என்று கேட்ட போது எதிர்மனுதாரர் அதிர்ச்சி அடைந்து என்னை அசிங்கப்படுத்த அவ்வாறு பெயர் கொடுத்தாயா என்று கேட்டார் என்றும் அதனை திரித்து இந்த குழந்தைக்கு யார் அப்பா என கேட்டதாக திரித்து சொன்னதாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

10) மருத்துவமனையில் கணவர் பெயர் தான் முன்னிலைப்படுத்துவார்கள் என்றும் அப்பாவின் பெயரை போட்டதால் அதிர்ச்சி அடைந்தார் என்றால் சரியல்ல. மருத்துவமனையில் என்னை திட்டிவிட்டு வீட்டிற்கு வந்து என்னை என் கணவர் அடித்தார். 5 மாத கர்பிணியாக இருக்கும் போது உடல் நிலை சரியில்லாததால் பால் வாங்கி தரும்படி கேட்டதற்கு எதிர்மனுதாரர் அடித்து துன்புறுத்தியதாக சொல்லியுள்ள நிலையில் அருகில் உள்ள காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேனா என்றால் இல்லை.

11) நான் பெயருக்கு முன்பாக என் அப்பா பெயரை போட்டது குறித்து நான் திட்டியது சம்மந்தமான ஆடியோ பதிவில் நான் பேசியது தான் உண்மை என்றால் நான் எப்போதும் உண்மையை தான் பேசுவேன். நான் அந்த சமயத்தில் என் கணவருக்கு முன்னுரிமை அளித்தேன். 8 மாத கர்பிணியாக இருந்த போது எதிர்மனுதாரர் குமாரபாளையத்தில் கடைக்கு செல்லலாம் என கூறி எனக்கு தெரியாமல் என் பெற்றோர் வீட்டிற்கு அழைத்து செல்லாமல் மேட்டூர் தெர்மல் நான்கு ரோட்டில் வண்டியை நிறுத்திவிட்டு என் அண்ணனை வந்து பார்த்து செல்லுமாறு சொல்லிவிட்டு உடனடியாக குமாரபாளையம் அழைத்து சென்றுவிட்டார்.

12) எதற்காக அழைத்து வந்தார் எதற்காக உடனே அழைத்து சென்றார் என்றால் என் அண்ணன் என் கணவரை தொலைபேசி மூலம் அழைத்து என் தங்கையை பார்க்க வேண்டுமென்று சொன்னதாக சொன்னார். நான் தான் என் அண்ணனிடம் சொன்னதாக என்னிடம் பிரச்சனை செய்தார். வீட்டிற்கு அழைத்து சென்று என்னை அடித்தார். குமாரபாளையத்திலிருந்து மேட்டூர் வரும் வழியில் எங்கு செல்கிறீர்கள் என்று என் கணவரை கேட்டேனா என்றால் கேட்டேன். கேட்டுவிட்டு இந்த பத்தியில் எங்கு அழைத்து சென்றார் என்று தெரியாமல் சென்றதாக சொல்லியுள்ளது தவறு என்றால் சரியல்ல.

13) எதிர்மனுதாரருக்கு என் அண்ணன் போன் செய்யவில்லைஎன்றும் என் தங்கையை பார்க்க வேண்டுமென்றும் சொல்லவில்லை என்றும் கர்பிணியாக உள்ள என்னை 45 கிலோமீட்டர் தள்ளி என்னை வரவழைத்து பார்க்க வேண்டிய அவசியம் இல்லை என்றும் அடுத்த மாதம் 9ம் மாதம் வளைகாப்பு செய்வதற்கு எதிர்மனுதாரரிடம் கேட்காமல் என் குடும்பத்தார் முடிவு செய்து என்னை அழைத்து செல்ல முயற்சித்துள்ளனர் என்றும் அது சம்மந்தமாக கட்டிய கணவன் என்னிடம் சொல்லாமல் வளைகாப்பு தேதியை உன் பெற்றோர் முடிவு செய்துள்ளார்கள் இது சரியா என்று கேட்டதற்கு என் அப்பா வரும் போது நீ தான் லீவு போட்டுட்டு வீட்டில் இருந்திருக்கனும் நீ வேலை என்று சென்றுவிட்டு இப்போது சத்தம் போடக்கூடாது என்றும் வேண்டுமென்றால் என் அப்பா அம்மாவிடம் கேட்டுக் கொள்ளுமாறு நான் தூண்டிவிட்டேன் என்றும் பொய்யாக எனக்கு தெரியாமல் அழைத்து வந்ததாக திரித்து சொல்கிறேன் என்றால் சரியல்ல.

14) 9ம் மாதத்தில் வளைகாப்பு நடந்த போது என் தாயாரை எதிர்மனுதாரர் திட்டினார் என்றும் தாலியை விற்றால் தான் செலவுக்கு பணம் கிடைக்கும் என சொல்லியுள்ளது குறித்து, இரவு முழுவதும் தூங்க விடாமல் என்ன சண்டையிட்டார் என்றால் வளைகாப்பு நடைபெறுவதற்கு எதற்கு அவசரப்படுகிறீர்கள் என்று என் தாயாரை பற்றி தகாத வார்த்தையால் மரியாதை குறைவாக திட்டினார்.

15) என் அம்மா 8 மணிக்கு வளைகாப்பு என்றால் 12 மணிக்கு வந்துவிட்டு மாதமாக உள்ள பிள்ளைக்கு ஜடை வில்லை கூட வாங்கமாட்டாயா என்று என் அம்மா என் கணவரை கேட்டாரா என்றால் இல்லை. என் அம்மா என்னை hair pin எத்தனை வாங்கி கொடுத்தேன் பத்திரமாக வைத்துக் கொள்ளமாட்டாயா என்று என்னை தான் திட்டினார். என் கணவரை திட்டவில்லை.

16) வளைகாப்பிற்கு முன்பு கோவிலுக்கு சென்றுவந்தோம் என்றால் சரிதான். சாதாரண உடையில் கோவிலுக்கு சென்று வந்த பிறகு என் கணவர் வேட்டி கட்ட வேண்டுமென்றும் நான் புடவை கட்ட வேண்டுமென்று என் அம்மா கடுமையாக கூறினாரா என்றால் கோவிலுக்கு செல்லும் போதும் புடவை கட்டி தான் சென்றேன். என் அம்மா வராத போது வளைகாப்பிற்கான தயார் நிலையில் இருவரும் இருந்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல.

17) வளைகாப்பு முடிந்து என்னை வீட்டிற்கு அழைத்து சென்றார்கள் என்றால் ஆமாம். வளைகாப்பு முடிந்தவுடன் பெண் வீட்டார் அவரது தாயார் வீட்டில் அழைத்து செல்வது தான் வழக்கம் என்றும் ஆனால் நான் இரவு முழுவதும் சண்டையிட்டு தூங்கவிடாமல் செய்ததாகவும், தாலியை கழட்டி தருமாறு கேட்டதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல.

18) 02.06.2019 ம் தேதி எங்கு குழந்தை பிறந்தது என்றால் தரண் மருத்துவமனையில் பிறந்தது. அந்த குழந்தையின் பெயர் அகிலேஷ், குழந்தை பிறந்த விவரத்தை கூட சொல்லாமல் மூடி மறைத்தோம் என்றால் சரியல்ல. கணவர் என்ற பெயரில் கையொப்பம் செய்ததே என் கணவர் தான். நான் அறுவை சிகிச்சை செய்து குழந்தை பிறந்த போது என் கணவர் தான் initial சம்மந்தமாக பிரச்சனை செய்தார்.

19) என் குழந்தையை என் கணவர் தான் கையில் வாங்கினார். முதல் பிரசவம் பெண் வீட்டார் தான் செய்வார்கள் என்றால் ஆமாம். எதிர்மனுதாரர் மீது இருந்த வெறுப்பில் அகிலேஷ் என்று பெயர் சூட்டியுள்ளேன் என்றும் குழந்தையை அழைத்து செல்ல 3 வது மாதம் கழித்து வந்தார்களா என்றால் மூன்று நபர்கள் எதிர்மனுதாரரின் தாயார், அம்மா, அக்கா ஆகியோர் மட்டும் வந்து ஆதி என்ற

பெயரை முடிவு செய்து குழந்தைக்கு வைத்து விட்டு சென்றுவிட்டார்கள். என் மகனின் நலன் கருதி நான் அகிலேஷ் என வைத்தேன். இந்த சங்கதியை நான் பிரமாண பத்தியில் சொல்லவில்லை என்றால் ஆமாம்.

20) எதிர்மனுதாரர், அப்பா, அம்மா அழைத்து செல்ல வந்தார்களா என்றால் எதிர்மனுதாரர் மட்டும் வரவில்லை. அவர் தாய் மாமா, எதிர்மனுதாரரின் பெற்றோர்கள் வந்தார்கள். ஜாதகம் பார்த்து நேரம் சரியில்லை என்றும் தனித்தனியாக பார்த்து தான் தனிவீடு வைக்க ஏற்பாடு செய்தார்கள். எதிர்மனுதாரரும் தனியாக ஜாதகம் பார்க்கவில்லை என்றும் நான் எதிர்மனுதாரருடன் வாழக்கூடாது என்று நான் தான் நிர்பந்தம் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரரின் தாயார் மாதமாதம் என்னை ஜாதகம் பார்க்க அழைத்து செல்வார். இந்த விவரத்தை பத்தியில் சொல்லவில்லை என்றால் ஆமாம்.

21) குழந்தைக்கு 5 வது மாதமாக இருக்கும் போது நான் தொலைபேசியுடன் ஒரு நபருடன் பேசிக் கொண்டிருந்ததை நான் சிறுவயது முதலே முஸ்லீம் சிறுவன் பப்ளுவை தூக்கி வளர்த்துள்ளேன் என்பதால் உரிமையுடன் என்னுடன் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தார். அதனை பார்த்த எதிர்மனுதாரரின் பெற்றோர் நான் வேறு ஒரு நபரிடம் பேசுவதாக பொய்யான சங்கதிகளை எதிர்மனுதாரருக்கு சொல்லி பிரச்சனை செய்தனர். நானும் அந்த நபரும் தனி அறையில் கதவை பூட்டிக் கொண்டு உட்கார்ந்து பேசும் போது யாராக இருந்தாலும் வேறு ஒரு ஆணுடன் என் வீட்டில் தனி அறையில் கதவை பூட்டி பேசினால் யார் என்று கேட்பார்கள் அதை பற்றி கேட்டதற்கு நீங்கள் யார் கேட்பதற்கு என்று அவர்களை அசிங்கப்படுத்திவிட்டு திருத்தி பத்தியில் போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. முன் அறையில் தங்கையுடன் அமர்ந்து தான் பேசினோம். கொசு கடிக்கிறது என்பதால் கதவை மூடினோம்.

22) குழந்தைக்கு 9 மாதமாக இருக்கும் போது எதிர்மனுதாரர் நீயும் குழந்தையும் குமாரபாளையம் வந்துவிடுங்கள் இல்லையென்றால் வேறு ஒரு பெண்ணை திருமணம் செய்து கொள்வேன் என மிரட்டியது சம்மந்தமாக காவல்

நிலையத்தில் புகார் கொடுத்துள்ளோ என்றால் இல்லை. என் வாழ்க்கை வேண்டுமென்பதால் புகார் கொடுக்கவில்லை. என் கணவர் திருமணம் ஆனது முதல் 11 மாதம் வரை அழைத்து சென்று குடும்பம் நடத்த மறுக்கிறார் என புகார் அளிக்கவில்லையா என்றால் என் மகனுக்காக நான் பொறுத்து சென்றேன்.

23) வீட்டிற்கு வந்த எதிர்மனுதாரரை என் பெற்றோர்கள், சகோதரர் அடித்து எதற்கு வீட்டிற்கு வருகிறாய் என்று சட்டையை கிழித்து அடித்து துரத்தினார்கள் என்றும் அதனால் எதிர்மனுதாரர் வரவில்லை என்றால் என் கணவர் குடித்துவிட்டு வந்து என்னை அடித்ததால் யாரும் பொறுத்துக் கொள்ளமாட்டார்கள்.

24) என் கணவர் குடிப்பார் என்று ஒரு இடத்திலும் பத்தியில் சொல்லாமல் குடித்துவிட்டு அடித்ததாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. தற்போது தான் வழக்கிற்காக மது அருந்துவதாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் மகனுக்கு முதல் வருட பிறந்த நாளை என் கணவருடன் கொண்டாடினோம் என்றால் ஆமாம். என் கணவர் அழைத்து சென்ற போது பிரச்சனை செய்தார் என்றும் பிரச்சனை செய்யவில்லை என்று நான் பேசிய ஆடியோ பதிவு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் என் எதிர்கால வாழ்க்கைக்காக மறைத்து பேசினேன்.

25) ஒரு மாதம் இருவரும் சண்டையில்லாமல் இருந்தோமா என்றால் எப்போதும் சண்டை தான் போட்டு வந்தோம். நான் தான் என் நகையை என் கணவரின் பெயரில் நகையை அடமானம் வைத்து பிறந்த நாள் கொண்டாடினோம். திருமணத்தின் போது என்ன நகை போட்டார்கள் என்றால் 1 1/2 பவுன் நகை போட்டார்கள். என் மகனை அழைத்து வரும் போது கொரோனா தொற்று காலகட்டத்தில் முழு அடைப்பா என்றால் பாதி அடைப்பு இருந்தது.

26) ஆட்கள் ஒரு வீட்டை விட்டு மற்றொரு வீட்டிற்கு செல்லக்கூடாது என்றால் அவ்வாறு இல்லை. பிறந்த நாள் விழாவிற்கு எத்தனை பேர் வந்தார்கள் என்றால் எதிர்மனுதாரரின் உறவினர்கள் யாரும் வரவில்லை. சாப்பாடு வீணாகியது. அதிதீவிர நிலையில் யாரையும் அழைத்திருக்க முடியாது என்றும்

பிறந்த நாள் விழாவிற்கு நகையை அடமானம் வைத்து செலவு செய்திருக்க முடியாது என்றால் சரியல்ல. ரூ.34,000/– க்கு தோடும், செயினை அடமானம் வைத்து அந்த தொகை முழுவதையும் நான் எதிர்மனுதாரரிடம் சண்டை செய்து விட்டு ஊருக்கு எடுத்துச் சென்றுவிட்டேன் என்றும் அது குறித்த ஆடியோ பதிவு உள்ளது என்றால் 1000 மட்டும் எடுத்துச் சென்றேன். மீதம் ரூ.33,000/– வைத்துவிட்டு சென்றதாக பத்தியில் சொல்லவில்லை என்றால் ஆமாம்.

27) எனக்கு பிறந்த குழந்தை எதிர்மனுதாரருக்கு பிறக்க வில்லை என்று யார் சொன்னார்கள் என்றால் என் மாமியார் சொன்னார். என் மாமியார் திட்டி துன்புறுத்தியதாக பத்தியில் சொல்லவில்லை என்றால் ஆமாம். எதிர்மனுதாரருடன் வாழ விருப்பமில்லை என்றும் எப்படி உள்ளார் என்று பார்க்க சென்று பிறந்த நாள் விழாவை கொண்டாடிவிட்டு நானே சண்டை செய்து கொண்டு என் உறவினர் வீட்டிற்கு சென்று தங்கி என் அப்பா அம்மாவை வரவழைத்து அவர்களுடன் சென்றுவிட்டேன் என்றும் 2019 வருடத்திலிருந்து இன்று வரை பெற்றோர் வீட்டில் வாழ்ந்து கொண்டு எதிர்மனுதாரரும் அவர் குடும்பத்தாரும் துன்புறுத்தி கொடுமை செய்ததாக பொய்யான சங்கதிகளை குறிப்பிட்டு எதிர்மனுதாரரை பழிவாங்க வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில் எதிர்மனுதாரர் என்னை அவருடன் வாழ அறிவிப்பு அனுப்பிய பின்னர் அவரை பழிவாங்க இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. முதலில் விவாகரத்து வழக்கு தாக்கல் செய்துவிட்டு அதன் பின்னிட்டு எப்படியாவது பழிவாங்க வேண்டி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என் மகன் என் கணவருக்கு பிறக்கவில்லை என்று சொன்னதால் நான் வீட்டை விட்டு வெளியேறினேன்.

28) நான் செய்த கொடுமைகளை சொல்லி அறிவிப்பு அனுப்பிய பிறகு அதை அப்படியே எதிர்மனுதாரர் செய்ததாக சொல்லி இந்த வழக்கு போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 01.08.2025 ம் தேதி எதிர்மனுதாரர் வா என்று அழைத்ததை தாங்கி கொள்ள முடியாமல் பதில் சொல்லாமல் இருந்து வந்துள்ளேன் என்றால் நான் அவர்களிடம் கொடுமை தாங்காமல் விவாகரத்து மனு தாக்கல் செய்தேன்.

29) என் மகனின் பிறப்பு தவறானது என்று சொன்னதால் தான் வெளியேறினேன் என்று சொல்லியுள்ள நிலையில் அந்த வாசகம் எந்த பத்தியில் உள்ளது என்றால் 8 வது பத்தியில் சொல்லியுள்ளேன். 10.06.2020 வரைக்கும் என் அம்மா வீட்டில் உள்ள நிலையில் அவ்வாறு சொல்ல இயலாது என்றால் சரியல்ல. பிறந்த நாளுக்கு தான் குமாரபாளையத்திற்கு வந்தேன் என்றால் ஆமாம். 02.06.2020 ம் தேதி முதல் பிறந்தநாள் கொண்டாடிய பிறகு நான்கு நாட்களில் நான் கொடுமைதாங்காமல் சென்றுவிட்டேன்.

30) சந்தோஷமாக உள்ள புகைப்படம் உள்ள நிலையில் நான் பொய்யாக துன்புறுத்தியதாக சொல்கிறார்கள் என்று சொன்னால் சரியல்ல. நான் எதிர்மனுதாரரை துன்புறுத்தியதாக எந்த ஆதாரமும் தாக்கல் செய்யவில்லை என்றால் என் வசம் ஆதாரம் உள்ளது. எவ்விதமான ஆதாரமும் இன்றி எதிர்மனுதாரரும் அவர் குடும்பத்தாரும் துன்புறுத்தி வாழவிடாமல் தடுத்ததாக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

31) பலமுறை கணவருடன் சேர்ந்து வாழ யாரை வைத்து பேசினேன் என்றால் என் கணவரிடம் தான் பேசினேன். மற்றவர்களை வைத்து பேசினால் அவன் யார் என்று கேள்விகேட்பார். நான் தான் முயற்சி செய்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் என்னை அடிமையாக வைத்துக் கொள்ள தான் அழைத்தார். பத்தியில் உள்ளதா என்றால் இல்லை. தங்க நகையை அடமானம் வைத்து நகையை மீட்க எதிர்மனுதாரர் அழைத்தார் என்றும் நகை மூழ்கினால் பரவாயில்லை என்று அடமானத்தை மூழ்கடித்தது நான் தான் என்றால் கையில் குழந்தையை வைத்துக் கொண்டு வரமுடியாது நீயே மூட்டு கொடு என்று சொன்னேன்.

32) ரூ.34,000/-ல் வண்டி Due கொடுத்ததாக பத்தியில் சொல்லவில்லை என்றால் ஆமாம். M.A., tamilliterature படித்து சேலம்கேம்பில் உள்ள பள்ளிக்கு தமிழ் ஆசிரியராக செல்கிறேன் என்றால் சரியல்ல. நான் B.Ed., படித்து முடித்துவிட்டேன் என்றால் சரியல்ல. பணியில் உள்ள நான் எதிர்மனுதாரர் ரூ.30,000/- சம்பளம் பெறுவதற்கான ஆதாரத்தை தாக்கல் செய்யவில்லை

என்றால் ஆமாம். எதிர்மனுதாரர் பெயரில் அசையா சொத்து இல்லை என்றால் ஆமாம்.

33) திருமணம் ஆன நாள் முதல் என் கணவரை தவிக்க வைத்துவிட்டு என் பெற்றோருடன் இருந்து விட்டு ரூ.5,00,000/- நஷ்ட ஈடு கேட்பது தவறு என்றால் சரியல்ல. இந்த வழக்கு பொய்யாக கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. எதிர்மனுதாரரை அவரது குடும்பத்தாரை நான் கொடுமைப்படுத்தினேன் என்றும் நான் தான் நஷ்ட ஈடு கொடுக்க வேண்டுமென்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

மறு விசாரணை இல்லை.

**ஒம்/- தே.மயில்சாமி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**